**செய்தி வெளியீடு எண் : 303** **நாள் : 14.02.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை அகில இந்திய அளவில் பல்கலைக் கழகங்களுக்கிடையே ஹரியானா மாநிலம், சோனாப்பட்டில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியில் சாம்பியன்ஷிப் வென்ற வீரர்கள் இன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (14.02.2023) சென்னை, ஆழ்வார்பேட்டை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய அளவில் பல்கலைக் கழகங்களுக்கிடையே ஹரியானா மாநிலம், சோனாப்பட்டில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியில் சாம்பியன்ஷிப் வென்ற சென்னை பல்கலைக்கழக அணியில் விளையாடிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சிறப்பு தங்கும் விடுதியை சார்ந்த 6 மாணவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

ஹரியானா மாநிலம், முர்த்தல் சோனிப்பட்டில் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டி 06.02.2023 முதல் 10.02.2023 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் சென்னை பல்கலைக்கழக அணி சாம்பியன்ஷிப் வென்றது. சென்னை பல்கலைக்கழக அணியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சிறப்பு தங்கும் விடுதி மாணவர்கள் ஜெயக்குமார், விஷ்ணு, விஷ்வேஷ், ஹரி, சங்கீத் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர் விளையாடினர். இந்த வீரர்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் திருமதி லதா ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in